# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 11,545 — 1958 ඔක්තෝබර් 3 වැනි සිකුරාදා — 3.10.1958**

11,545 ம் இலக்கம்— 1958 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 3 திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூர் ஆட்சி

## அறிவித்தல்கள்

1947 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந் திகதி வெளியான 9,773 ம் இலக்க விசேஷ "கெசெற்" றில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனத்தால் திருத்தப்பெற்ற மயானங்கள், அடக்க பூமிகள் சட்டத்தின் (அத்தியாயம் 181) 33 ம் பிரிவின்கீழும், தக்க அதிகாரத் தாபனத்தால், அதாவது, யாழ்ப்பாணம் மாவட்டத்து நாரந்தனை கிராமப் பகுதியின் கிராமச் சங்கத்தின் சிபார்சின் பேரிலும், உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சர், இதன் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள காணியை அடக்க பூமியாக யவப்பதையும், கரம்பனைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் அக்காணியை அடக்கபூமியாக உபயோகிப்பதையும் அங்கீகரித்துள்ளார்.

வி. சீ. ஜயசூரிய,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சு.

கொழும்பு,
1958 ம் ஆல் செப்ரெம்பர்மீ 22 ந் உ.

### அட்டவணை

வட மாகாணத்தில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில், தீவுப் பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவில், கரம்பன் கிராமத்தில் இருக்கும் வெள்ளைப் புற்று எனப்படுவதும், முப்பத்தொரு பரப்பு பத்துக்குழி (வாகுச் செய்கை) நிலப்பரப்புக் கொண்டதும், உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. எ. லசாரஸ் தயாரித்த 1958 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ந் திகதியைக் கொண்ட 1,966 ம் இலக்க நில அளவைப் படத்தில் மேலும் விவரமாக வர்ணிக்கப்படுவதும், கீழ்க்காணும் எல்லைகளை உடையதுமான காணி :—

வடக்கு : பேதுருப்பிள்ளையின் மகள் இசவேற்பிள்ளைக்கும் மற்றவர்களுக்கும் சொந்தமான ஆதனத்தால்,

கிழக்கு : தெருவால்,

தெற்கு : ஒழுங்கையால் அல்லது தெருவால்,

மேற்கு : அமிர்தலிங்கத்தின் மனைவி சிவக்கொழுந்துவுக்கும் மற்றவர்களுக்கும் சொந்தமான ஆதனத்தால்.

---

### 1952 ம் ஆண்டின் 6 ம் இலக்க உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் (பிரமாண உபவிதிகள்) சட்டம்

1952 ம் ஆண்டின் உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் (பிரமாண உப விதிகள்) சட்டத்தின் 3 ம் பிரிவின்படி யாழ்ப்பாணம் மாவட்டத்து பண்டத்தரிப்பு கிராமப் பகுதியின் கிராமச் சங்கம் நிறைவேற்றிய கீழ்க்காணும் தீர்மானம் அப்பிரிவின் தாற்பரியப்படி பிரசுரிக்கப்படுகின்றது.

#### தீர்மானம்

உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு "செனெற்" சபையாலும் சனப் பிரதிநிதிகள் சபையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டதென 1953 ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 7 ந் திகதி வெளியான 10,560 ம் இலக்க "கெசெற்" றில் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட பிரமாண உபவிதிகளின் 1 முதல் 37 ஈறுகவுள்ள பாகங்களை இத்தீர்மானம் "கெசெற்" றில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்ளுவதென்று பண்டத்தரிப்புக் கிராமச் சங்கம், 1952 ம் ஆண்டின் உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் (பிரமாண உபவிதிகள்) சட்டத்தின் 3 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின்படி இத்தால் தீர்மானிக்கின்றது.

க. நாகமுத்து,
தலைவர்.

பண்டத்தரிப்பு, கிராமச் சங்கம்,
1958 ம் ஆல் ஓகஸ்ற்மீ 23 ந் உ.

**1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்**

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்) "

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன், **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. " நகலை " **கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக "ரைப்" அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறெக்ரரால் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப் படமாட்டா.

10. **1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி** தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு மூன்று வேலை நாட்களுக்கு முன் பி. ப. 4 மணிக்குள் (சாதாரணமாக செவ்வாய்க்கிழமை பி. ப. 4 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

13. **ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முன்பணமாக கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவுசெய்யப்படும்.**

14. **சந்தா விகிதங்கள்—**

| | ரூ. | ச. | |
|---|---|---|---|
| ஒரு வருட சந்தா ... .. | 15 | 0 | .. ஒவ்வொரு பகுதிக்கும் |
| | 7 | 0 | .. ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியின்தும் தனிப் பிரதி .. | 0 | 25 | |
| | 0 | 31 | .. தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 10 | |
| | 0 | 14 | .. தபாற் செலவுடன் |

15. கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் வேண்டும். **கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு** விண்ணப்பிக்கவேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.